1st August 1966]

திரு. ம. கமலநாதன் : தலைவரவர்களே, ஊட்டியிலே நடைபெறும் கால்நடைப் பண்ணையிலே கால்நடைகள் இறந்து கொண்டே வருகின்ற சூழ்நிலையில் இப்படிப்பட்ட பண்ணைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு ஸ்ரீபெரும்புதூர் மட்டுமல்ல, மற்ற இடங்களும் சரியான இடங்களா என்பதை எல்லாம் அரசாங்கம் ஆராய்ந்து முடிவெடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரிலேயிருந்து சில நிபுணர்கள் வந்து பார்த்து தகுதியான இடமாக இருந்தால்தான் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : கால்நடைப் பண்ணைக்காக 50 லட்ச ரூபாய் அளவில் தேசியத் திட்டம் போன்று செய்யப்படுகிற திட்டத்தில் இதற்காக மேய்ச்சல் நிலம் ஏராளமாக இருக்க வேண்டும். ஸ்ரீ பெரும்புதூரில் மேய்ச்சல் நிலம் ஏராளமாக இருக்கிறதா என்பது ஆராயப்பட்டதா ? மேய்ச்சல் நிலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமாக இருக்கிறது. அங்கேயும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : புறம்போக்கு இடங்கள், பாரஸ்ட் இடங்கள், மேலும் தனிப்பட்ட அன்பர்கள் மூலம் சுமார் ஆயிரம் ஏக்கர்கள் வரலாம். இவற்றை வைத்துத்தான் அந்த இடத்தில் இதை வைக்கலாமா என்பது பரிசீலிக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : கால் நடைப் பண்ணை கோவை மாவட்டத்தில் காங்கேயம், செட்டிநாடு அல்லது ஒரத்தநாடு பகுதிகளிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பரிசிலனை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : செட்டிநாட்டிலே ஒரு கால்நடைப் பண்ணை இருக்கிறது. ஏற்கனவே கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானி சாகர் பகுதியைப் பார்த்திருக்கிறார்கள். நிபுணர்கள் வந்து பார்த்து எந்த இடத்திலே வைக்கலாம் என்று கூறுகிறார்களோ அந்த இடத்தில்தான் வைக்கலாம்.

Cattle Insurance Scheme

*9. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state, with reference to the answer given to Question No. 275 on 4th November 1965 :—

(*a*) whether the Cattle Insurance Scheme has been introduced in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இம்மாநிலத்தில் இத்திட்டம் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. முன்னோடி நடவடிக்கையாக இன்ஷூர் செய்யத்தக்க வயதுள்ள மாடுகள், எருமைகள் இவற்றின் மரண விவரம் பற்றி குறிப்பிட்ட பகுதிகளில் புள்ளி விவரம் சேகரித்து சர்வே ஒன்றை இந்திய அரசு நடத்தத் திட்டமிட்டுள்ளது. இன்ஷூரன்ஸ் பிரிமியம் விதங்களையும், இழப்பீடு விவரங்களையும் கணக்கிடுவதே இந்த சர்வேயின் நோக்கமாகும்.

[1st August 1966

ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வட்டங்கள் அடங்கிய சைதாப்பேட்டை விலங்கின வளர்ச்சி மும்முரத் திட்டப் பகுதியில் (Intensive Cattle Development Project area) முன்னோடி சர்வே நடத்த மாநில அரசாங்கம் எண்ணியுள்ளது. சர்வே முடிந்த பின்னர் இன்ஷூரன்ஸ் முன்னோடி திட்டத்தை அப்பகுதியில் செயல் படுத்துவதே நோக்கமாகும். அந்தச் சர்வேயை நடத்த இந்திய அரசினரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இம் மாநில கால்நடை வளர்ப்புத் துறை முன்னோடி சர்வேயை ஆரம்பித்துள்ளது.

திரு. வை. சங்கரன் : அந்தப் பகுதி மட்டுமல்லாது, ஒவ்வொரு மாவட்டத்திலும் இதை ஏற்படுத்தி ராஜ்யம் பூராவுக்கும் விஸ்தரிப்பதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா? அப்படியானால் எந்த முறையில் மாநிலம் பூராவுக்கும் விஸ்தரிக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : முதலிலே பரீட்சார்த்தமாக இந்த இடத்திலே கொண்டுவரலாம் என்று செய்யப்படுகிறது. அது வெற்றிகரமாக இருந்தால் இதர இடங்களிலும் ஏற்பாடு செய்யலாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆளுங் கட்சியினருடைய சார்பில் இந்தத் திட்டத்தைப்பற்றி பலரால் பேசப்பட்டு வருகிறது. மத்திய அரசைப் பொறுத்தளவிலே ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதாகவும், மாநில அரசாங்கங்கள்தான் இந்தத் திட்டத்தின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால், இதில் நம்முடைய அரசாங்கம் தீவிரமாக முயற்சி யெடுக்கவில்லை என்ற கருத்தா? அல்லது தீவிரமாக முயற்சியெடுத்துக்கொண்டு வருகிறது என்ற கருத்தா?

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரின் ஒப்புதல் பேரில்தான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியும். ஏற்கனவே இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டது. இப்பொழுது மத்திய சர்க்காருடைய ஒப்புதலுடன் சர்வேயை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இனிமேல்தான் எடுத்துக்கொள்ளப்படும்.

படிப்பு உதவிப்பணம் பெற வருமான வரம்பு

* 10. கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : திரு. து. ப. அழகமுத்து : } கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பிற்பட்ட வகுப்பு காலேஜ் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்க வருமான வரம்பு என்ன?

(இ) அந்த வரம்புத் தொகையை உயர்த்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆண்டுக்கு ரூ. 1,500

(இ) இல்லை.